# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, கலாநிதி சோமா எதிரிசிங்க நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

**2008, ஒற்றோபர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

# 2008 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, கலாநிதி சோமா எதிரிசிங்க நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்) 29/2005

## கலாநிதி சோமா எதிரிசிங்க நிதியத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

"கலாநிதி சோமா எதிரிசிங்க நிதியம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான நிதியமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிதியம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :-

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, கலாநிதி சோமா எதிரிசிங்க நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கலாநிதி சோமா எதிரிசிங்க சுவர்ணாதார நிதியத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல்சேர்த்துக்கொள்ளப்படுபவர்ளுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கலாநிதி சோமா எதிரிசிங்க நிதியம்" என்ற பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக

கலாநிதி சோமா எதிரிசிங்க நிதியத்தைக் கூட்டிணைத்தல்.

வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) பொருளாதார அல்லது நிதி ரீதியாக கஷ்டப்படும் மாணவர்களுக்கு உயர் கல்வியை மேற்கொள்வதற்காக அவர்களை ஊக்கப்படுத்தலும் உதவியளித்தலும் அத்துடன் குறைந்த வருமானத்தையுடைய குடும்பப் பிள்ளைகள், தாய் தந்தையர் இருவரையும் அல்லது ஒருவரை இழந்த மாணவர்கள் அல்லது அதையொத்த பாதிக்கப்பட்ட மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரு வதற்கு உதவியளித்து அவர்களை ஊக்குவித் தல் ;

(ஆ) ஏழை மாணவர்களுக்கும், இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சை, புற்றுநோய் தொடர்பான நோய்களுக்கான சிகிச்சை தேவைப்படும் கைவிடப்பட்டோருக்கும் நிவாரணத்தை யும் உதவியையும் ஏற்பாடு செய்தல் ;

(இ) அநாதை இல்லங்களையும், முதியோர் இல்லங்களையும் நிறுவுதலும், பராமரித்தலும், சமூக நலன்புரி நிலையங் களை நிறுவுதலும் ;

(ஈ) குருடர், செவிடர், ஊமை மற்றும் அங்கவீனர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதலும், நலன்புரி நிலையங் களை நிறுவுதலும் ;

(உ) வறியவருக்கும், கைவிடப்பட்டோருக்கும் சக்கர நாற் காலி, கைப்பிடி., மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல் ;

(ஊ) உறைவிடம் இல்லாதோருக்கு வீட்டு வசதிகளை வழங்கு தலும், வீடு கட்டுமானங்களை முடிப்பதற்கு உதவி செய்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டுள்ள தொண்டர்களுக்கும், ஏனையோருக்கும் புலமைப்பரிசில்கள் என்ற வழிவகைமூலம் அல்லது வேறுவகையாக நிதிசார் உதவியளித்தல் ;

(ஏ) நூலகங்களை நிறுவிப் பராமரிப்பதுடன், நூல்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள் மற்றும் வார மஞ்சரிகள் போன்றவற்றை வெளியிடுதலும், விநியோகித்தலும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்ததென தோன்றக்கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான கண்காட்சிகள், சொற்பொழிவுகள், மாநாடுகள், தத்துவக் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், வகுப்புகள், விவாதங்கள், சம்மேளனங்கள், சுற்றுலாக்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது வேறேதேனும் நடவடிக்கைகளை நடாத்துதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட வேறு ஏதேனும் மன்றங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தலும் இணைதலும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கையிலும், வேறெங்கேனும் மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், கூட்டுக்கற்கைகள் அத்துடன் விரிவுரைகள் போன்றவற்றை நடாத்துதலும் ஆதரவளித்தலும் ; அத்துடன்

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் வேண்டிய புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித் தாள்கள் அத்துடன் பருவ ஏடுகள் போன்றவற்றை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும், கட்டுப்பாடும், நிருவாகமும் கூட்டுத்தாபனத்தின் வலுவிலுள்ள விதிகளுக்கமைய (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளும் பேரவையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க உறுப்பினர்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களை இப்பேரவை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்தினது ஆளும் பேரவையின் உறுப்பினர்களாகவும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக்கின்றவர்களுமானவர்கள் கூட்டுத்தாபனத்தினது முதலாவது பேரவையின் உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பேரவை தேவையெனக் கருதின் புதிய உறுப்பினர்களை நியமிக்கவும், வெற்றிடங்கள் ஏற்படின் அவற்றை நிரப்பவும் பேரவை தத்துமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

5. இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றுக்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் ;

(ஆ) நாணயமாற்றுண்டியல்களையும், காசோலைகளையும், வாக்குறுதிப் பத்திரங்களையும், ஏனைய கைமாற்றத்தகு சாதனங்களையும் ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக் கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், மாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் அத்துடன் வங்கிக் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும், மூடுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைப் பேரவை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஈ) ஒப்பப்பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அத்துடன் எவ்வகையினதுமான கொடைகள் என்பவற்றைப் பரிந்து கேட்டலும் பெறுதலும் ;

(உ) எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் ;

(ஊ) ஏதேனும் ஆதனத்தைப் பாதிக்கின்ற எவையேனும் நிபந்தனைகளை மற்றும் ஏதேனும் சட்டபூர்வமான நம்பிக்கைப்பொறுப்புக்களை பொறுப்பேற்றல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றுதல், புரிதல், நிருவகித்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களையும், சேவையாளர்களையும், நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது தொழில் முடிவுறுத்தலும் பேரவை தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும் மற்றும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீக்குதலும் ;

(ஆ) பேரவையைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் பதவி விலகுதல், பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பேரவையின் தத்துவங்களும், கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், பதவி நீக்கமும், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நடத்தையும் ;

(ஈ) பேரவையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) பேரவையிலும், கூட்டுத்தாபனத்திலும் உறுப்பாண்மைக்கான தகைமை மற்றும் தகைமையீனங்கள் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் 6 ஆம் பிரிவின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியமானது -

(அ) இச்சட்டம் தொடங்கிய திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிதியத்தின் வரவில் இருந்த எல்லாப் பணங்களையும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கிய திகதிக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்துக்குத் திரளக்கூடிய எல்லாப் பணங்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்தின் வரவிலுள்ள பணங்கள் யாவும், கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் உறப்படும் செலவினங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

8. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும். கணக்காய்வும் கணக்குகளும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவரர்கவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

நிதியத்தால் செலுத்தப்படவுள்ளனவும், நிதியத்திற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.

**9.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிதியத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிதியத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**10.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்து மாற்றல், இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும், தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

எவ்வாறு கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பொறிக்கப்படுதல் என்பது.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் இரண்டு உறுப்பினர்களது முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் அல்லது ஒடுக்கப்படுதலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும், அதன் உறுப்பினர்களிடையே

ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் விதிகளின் மூலம் தடை செய்கின்றதுமான நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேனகொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்